Uva Wellassa University

# தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதில் பெருமை கொள்வோம்

# வெற்றிடங்கள் — ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

## 01. பதவி:புள்ளிவிபரவியல் அதிகாரி - தரம் II
(STATISTICAL OFFICER)

**தகைமைகள்:**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ உயர் கல்வி நிறுவனத்தில் (**HEI**) கணிதம் அல்லது புள்ளிவிபரவியல் பாடத்தில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு உயர் பிரிவில் சிறப்பு/பொது பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

**அல்லது**

2. கணிதம்/ புள்ளிவிபரவியல் பாடத்தில் குறைந்தபட்சம் 30 புள்ளிகளுடன் புள்ளிவிபரவியல் ஒரு வருட கால பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவுடன் பொதுப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

**அல்லது**

3. புள்ளிவிபரவியலில் சமமான தகுதி பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு :** புள்ளிவிபரவியல் பணியில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

***திறன் தேர்வு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.***

## 02. பதவி: கியுரேட்டர் (LANDSCAPE) தரம் III
(CURATOR)

**தகைமைகள்:**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ உயர் கல்வி நிறுவனத்திலிருந்து (**HEI**) கமத்தொழில் அல்லது கமத்தொழில் தொழில்நுட்பம் மற்றும் கமத்தொழிலில் நான்கு ஆண்டு சிறப்பு இளமாணிப் பட்டம் (கௌரவம்) பெற்றிருக்க வேண்டும் மற்றும் பயிர் விஞ்ஞானம்/தோட்டக்கலை/மலர்கள்/வனவியல் ஆகியவற்றில் முதன்மைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும், மேலும் மேற்பார்வைத் திறனில் ஒரு அரச / கூட்டுத்தாபனம் அல்லது புகழ்பெற்ற தனியார் துறை நிறுவனத்தில் நிலம் அழகுபடுத்தலில் குறைந்தது ஒரு (01) வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

   **அல்லது**

2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ உயர் கல்வி நிறுவனத்திலிருந்து (**HEI**) நிலம் அழகுபடுத்தலில் நான்கு ஆண்டு சிறப்பு இளமாணிப் பட்டம் (கௌரவம்) பெற்றிருக்க வேண்டும், மேலும் மேற்பார்வைத் திறனில் ஒரு அரச / கூட்டுத்தாபனம் அல்லது புகழ்பெற்ற தனியார் துறை நிறுவனத்தில் நிலம் அழகுபடுத்தலில் குறைந்தது ஒரு (01) வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

   **அல்லது**

3. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ உயர் கல்வி நிறுவனத்திலிருந்து (**HEI**) தாவரவியலில் நான்கு ஆண்டு சிறப்பு இளமாணிப் பட்டம் (கௌரவம்) பெற்றிருக்க வேண்டும், மேலும் மேற்பார்வைத் திறனில் ஒரு அரச / கூட்டுத்தாபனம் அல்லது புகழ்பெற்ற தனியார் துறை நிறுவனத்தில் நிலம் அழகுபடுத்தலில் குறைந்தது இரண்டு (02) வருடங்களுக்கு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

***கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.***

## 03. பதவி: செயற்றிட்ட முகாமையாளர்
(PROJECT MANAGER)

**தகைமைகள்:**

1. சிவில் பொறியியலில் **B.Sc (Eng.)** விசேடத்துவப் பட்டம்

   அல்லது

   அளவுக் கணிப்பீட்டில் **B.Sc** விசேடத்துவப் பட்டம்

   அல்லது

   நிகரான தொழில்சார் தகைமைகள்

   மற்றும்

2. அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்தின் கூட்டு வர்த்தக அங்கத்துவம்

   அல்லது

   அங்கீகரிக்கப்பட்ட அளவுக் கணிப்பீட்டு நிறுவனத்தின் கூட்டு வர்த்தக அங்கத்துவம்

   மற்றும்

3. நிர்மாண செயற்றிட்டங்கள், ஒப்பந்தங்களைக் கையாளுதல் மற்றும் நேரடி உழைப்பை முகாமைத்துவம் செய்வதில் தொடர்புடைய 10 வருடகால அனுபவம்

***கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.***

## 04. பதவி: உதவி வலையமைப்பு முகாமையாளர் தரம் II
ASSISTANT NETWORK MANAGER

**தகைமைகள்:**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து கணனி விஞ்ஞானம் / கணனி பொறியியலில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பில் B.Sc சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்

   அல்லது

2. (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து கணனி விஞ்ஞானம் / கணனி பொறியியலில் B.Sc சிறப்புப் பட்டத்தில் ஒரு சித்தி

   அல்லது

   அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து கணனி அறிவை ஒரு பாடமாகக் கொண்டு முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு B.Sc பொதுப் பட்டம்

   மற்றும்

   (ஆ) கணனி / வலையமைப்பு துறையில் ஒரு வருடகால அனுபவம்

3. (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து கணனி அறிவை ஒரு பாடமாக் கொண்டு B.Sc பொதுப் பட்டத்தில் ஒரு சித்தி

   அல்லது

   அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து (கணனி ஒரு பாடக்கூறு அல்ல) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் ஒரு B.Sc பொதுப் பட்டம்

   மற்றும்

   (ஆ) கணனி / வலையமைப்பு துறையில் இரண்டு வருடகால அனுபவம்

   அல்லது

4. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து (கணனி ஒரு பாடக்கூறு அல்ல) ஒரு B.Sc பொதுப் பட்டத்தில் சித்தி

   மற்றும்

   கணனி / வலையமைப்பு துறையில் நான்கு வருடகால அனுபவம்

   அல்லது

5. வேறேதாவது பட்டம்

   மற்றும்

   அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து கணனி விஞ்ஞானம் / கணனி தொழில்நுட்பத்தில் ஒரு பட்டப் பின்படிப்பு டிப்ளோமா

   மற்றும்

   கணனி / வலையமைப்பு துறையில் ஒரு வருடகால அனுபவம்

   அல்லது

6. பல்கலைக்கழக சேவையில் கணனி நிரலியலாளராக (Computer Programmer )15 வருடகால அனுபவம்.

***கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.***

## 5. பதவி: உடற்கல்வி போதனாசிரியர் தரம் III
(INSTRUCTOR IN PHYSICAL EDUCATION)

**தகைமைகள்:**

1. தேசிய சம்பியன் / தேசிய குழுவின் அங்கத்துவத்தைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் ஒரு பட்டத்தைப் பெற்றவர் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன் ஒப்புதலுடன் விளையாட்டுத் துறையில் ஏனைய சமமான சாதனைகள்.

   அல்லது

2. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒன்று மற்றும் அதே அமர்வில் சித்தியடைந்த மற்றும் சர்வதேச மட்ட ஏதாவது விளையாட்டுத்துறையில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய அத்துடன் இவ்வாறான விளையாட்டுத்துறையில் ஐந்து வருடகால அனுபவம் கொண்ட ஒரு அபேட்சகர்.

   **அல்லது**

3. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒன்று மற்றும் அதே அமர்வில் குறைந்தபட்சம் 03 பாடங்களில் சித்தி மற்றும் மாத காலத்திற்குக் குறையாத விளையாட்டுத் துறையில் ஒரு டிப்ளோமா அத்துடன் விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்தல் மற்றும் செயற்படுத்துவதில் ஐந்து (05) வருடகால அனுபவம்.

**குறிப்பு:**

- விளையாட்டுத்துறை / ஏற்பாட்டு நிர்வாகக் குழுவை நிர்வகிப்பதில் ஐந்து (05) வருட கால அனுபவத்தை நிரூபிப்பதற்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- மேற்கூறிய (1) தகைமையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் விளையாட்டுத் துறையில் வேறு சமமான சாதனைகளைக் கொண்ட அபேட்சகர், அவ்வாறான தகைமையை **UGC** அங்கீகரிக்குமானால் கவனத்திற் கொள்ளப்படும்.

***கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.***

## 6.பதவி: கணனி தொழில்நுட்பவியல் போதனாசிரியர் தரம் III
(INSTRUCTOR IN COMPUTER TECHNOLOGY)

**தகைமைகள்:**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணனி விஞ்ஞானம்/ கணனி பொறியியலில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் ஒரு **B.Sc** சிறப்புப் பட்டம்

   **அல்லது**

2. (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணனி விஞ்ஞானம்/ கணனி பொறியியலில் ஒரு **B.Sc** சிறப்புப் பட்டச் சித்தி.

   **அல்லது**

   அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணனிப் பாடத்தை ஒரு கூறாகக் கொண்டு முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் ஒரு **B.Sc** பொதுப் பட்டம்

   **மற்றும்**

   (ஆ) கணனித் துறையில் 10 வருடகால அனுபவம்

   **அல்லது**

3. (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணனிப் பாடத்தை ஒரு கூறாகக் கொண்டு ஒரு **B.Sc** பொதுப் பட்டத்தில் சித்தி

   **அல்லது**

   அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் (கணனிப் பாடத்தை ஒரு கூறாக இல்லாமல்) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் ஒரு **B.Sc** பொதுப் பட்டம்

   **மற்றும்**

   (ஆ) கணனித் துறையில் இரண்டு வருட கால அனுபவம்

4. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் (கணனிப் பாடத்தை ஒரு கூறாக இல்லாமல்) **B.Sc** பொதுப் பட்டத்தில் ஒரு சித்தி.

   **மற்றும்**

   கணனித் துறையில் மூன்று வருடகால அனுபவம்

   **அல்லது**

5. வேறேதாவது பட்டம்

   **மற்றும்**

   அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணனி விஞ்ஞானம்/ கணனி பொறியியலில் ஒரு பட்டப் பின்படிப்பு டிப்ளோமா

   **மற்றும்**

   கணனித் துறையில் ஒரு வருடகால அனுபவம்

***திறன் தேர்வு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.***

---

**சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் (2025-01-01இல் உள்ளவாறு)**

- **புள்ளிவிபரவியல் அதிகாரி பதவி - தரம் II**
  U-EX I (IV)
  ரூபா: 85,305-3x2,020-91,365 (EB) 93765;12x2,400-122,565 மாதாந்தம் (2025-01-01இல் உள்ளவாறு)
- **பதவி: கியுரேட்டர் (LANDSCAPE) பதவி தரம் III**
  U-EX I (II)
  ரூபா: 85,305-3x2,020-91,365 (EB) 93765;12x2,400-122,565 மாதாந்தம் (2025-01-01இல் உள்ளவாறு)
- **செயற்றிட்ட முகாமையாளர் பதவி**
  U-EX I (II)
  ரூபா: 85,305-3x2,020-91,365 (EB) 93765;12x2,400-122,565 மாதாந்தம் (2025-01-01இல் உள்ளவாறு)
- **உதவி வலையமைப்பு முகாமையாளர் பதவி தரம் II**
  U-AS 2 (II)
  ரூபா: 85,305-3x2,400-92,505(EB)94,905-14x2,400-128,505 மாதாந்தம் (2025-01-01இல் உள்ளவாறு)
- **உடற்கல்வி போதனாசிரியர் பதவி தரம் III**
  U-AS 1 (II)
  ரூபா: 68,145-18x1,190 -89,565 மாதாந்தம் (2025-01-01இல் உள்ளவாறு)
- **கணனி தொழில்நுட்பவியல் போதனாசிரியர் தரம் III**
  U-AS 2 (II)
  ரூபா: 85,305-3x2,400-92,505(EB)94,905-14x2,400-128,505 மாதாந்தம் (2025-01-01இல் உள்ளவாறு)

இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழக முறைமைக்கு ஏற்புடையதான அரசாங்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

நியமன நிபந்தனையானது 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் விதிகள், அதன் பின்னரான திருத்தங்கள் மற்றும் அதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளைச் சட்டம், ஒழுங்கு விதிகள், சட்ட திட்டங்கள் என்பவற்றிற்கு அமைவானதாகும்.

**ஏனைய நிபந்தனைகள்**

1. சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாக இருக்க வேண்டும்.
2. 45 வயதிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பரிந்துரைக்கப்பட்ட படிவங்களுடன் தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள். சுய தரவுடன் பதிவுத் தபாலில், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், மனிதவளப் பிரிவு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் 2025-09-19ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
4. விண்ணப்பப் படிவம் மற்றும் கூகுள் படிவங்கள் மற்றும் தொடர்புடைய தகவல்களை **www.uwu.ac.lk**. எனும் பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
5. முக்கியமானது: மேலும், உங்கள் விண்ணப்பத்தை கூகுள் படிவம் வழியாகச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும், மேலும் உங்கள் விண்ணப்பப் படிவத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியை இறுதித் திகதிக்கு முன்னர் கூகுள் படிவத்தில் பதிவேற்ற வேண்டும். https://forms.gle/TLGporGUhjD2vWXLA
6. தயவு செய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்.
7. முழுமையற்ற விண்ணப்பங்கள், ஆதார ஆவணங்கள் அற்ற விண்ணப்பங்கள் மற்றும் முடிவுறுத்தல் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. அபேட்சகர்களை குறும் பட்டியலிடுவதற்கும் மற்றும் அவ்வாறான அபேட்சகர்களை நேர்முகத்தேர்விற்கு அழைப்பதற்குமான உரிமையை பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.
8. மேலதிக தெளிவுபடுத்தல்களை மனிதவளப் பிரிவு, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். **055-3128945 / 055-3128944** அல்லது **recruitment@uwu.ac.lk**

**பதில் பதிவாளர்,**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பசறை வீதி,**
**பதுளை.**
**0552226441**
**2025-08-14.**